**<u>சேவுகம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர்(பொ) அவர்களின் நடவடிக்கைகள்</u>**

**<u>முன்னிலை : திருமதி.என். சந்தனம்மாள்,</u>**

**<u>ந.க. எண் : 11/2024</u>** **<u>நாள் : 07.2.2024.</u>**

பொருள் : குடியிருப்பு மனைப்பிரிவு – திண்டுக்கல் மாவட்டம் – சேவுகம்பட்டி முதல்நிலை பேரூராட்சி – சேவுகம்பட்டி வருவாய் கிராமம் சர்வே எண்கள். 1112/1A1, 1112/1B1, 1121/2B இல் 9880.00 சதுர மீட்டர் (2.44 ஏக்கர்) பரப்பளவில் அமைந்துள்ள மனை எண்கள் 1 முதல் 46 மற்றும் மனுதாரர் உபயோக இடம் ஆகியவைகளை அங்கீகரித்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண.79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை UD4(3) நாள்.04.05.2017.
2. அரசாணை (நிலை) எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை UD4(3) நாள் 09.12.2020.
3. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திண்டுக்கல் அவர்களின் இணையதள கடிதம் ந.க.எண்.39YSMMK1/2023/TCP நாள்.12.11.2023.
4. அய்யம்பாளையம் சார்பதிவக தானப்பத்திர பதிவு எண்.3004/2023 நாள்.12.12.2023
5. நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநர், திண்டுக்கல் அவர்களின் இணையதள கடிதம் ந.க.எண். 39YSMMK1/2024/TCP நாள்.02.01.2024.
6. சேவுகம்பட்டி பேரூராட்சி மன்றத் தீர்மான எண்.10.2024, நாள்.30.1.2024.

*****

<u>உத்திரவு:</u>

திண்டுக்கல் மாவட்டம், சேவுகம்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண். 1112/1A1, 1112/1B1, 1121/2B இல் திருமதி. ஆர். பழனியம்மாள், க.எண்.2/12A, உயர்நிலைப்பள்ளி, பெரிய தெரு, பட்டிவீரன்பட்டி, திண்டுக்கல் என்பவருக்கு சொந்தமான 9880.00 சதுர மீட்டர் (2.44 ஏக்கர்) பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கும் நிலையில் உள்ளதாகவும், அதன் பொருட்டு சாலை, பொது உபயோகத்திற்கான பரப்பினை உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்து வடிகால் வசதியும் செய்யப்பட்டு அதன் விபரத்தை தெரிவிக்க இணை இயக்குநர், நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களின் பார்வை 3 இல் கண்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் மனைப்பிரிவு உரிமையாளரால் சேவுகம்பட்டி பேரூராட்சிக்கு சாலை அமைப்பு வரைபடத்தில் குறிப்பிட்டிருந்த அளவுகளின்படி பொது உபயோகம் மற்றும் உத்தேச சாலைகளை பார்வை 4ல் காணும் அய்யம்பாளையம் சார்பதிவகம் நன்கொடை ஆவண எண். 3004/2023 நாள்.12.12.2023.ன் மூலம் பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பார்வை 5ல் காணும் நகர் ஊரமைப்பு துறை, திண்டுக்கல் மாவட்ட துணை இயக்குநரது கடித்தில் சிறப்பு நிபந்தனைகள் 1 முதல் 6 ன்படி இசைவு ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே, திண்டுக்கல் மாவட்டம், சேவுகம்பட்டி முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட சேவுகம்பட்டி வருவாய் கிராம எண்கள் 1112/1A1, 1112/1B1, 1121/2B இல் 9880.00 சதுர மீட்டர் (2.44 ஏக்கர்) பரப்பளவில் அமைந்துள்ள மனை எண்கள் **1** முதல் **46** மற்றும் மனுதாரர் உபயோக இடம் ஆகியவைகளை திண்டுக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநரது பார்வை 5 –ன்படி மேற்படி மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, மேற்காணும் அடிப்படை வசதிகள் செய்து முடிக்கப்பட்டு, பார்வை **6**ல் காணும் இப்பேரூராட்சி மன்றத் தீர்மானத்தில் அனுமதி வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளதன் பேரில், மேற்காணும் மனைப்பிரிவை அங்கீகரித்து இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

செயல் அலுவலர்,
சேவுகம்பட்டி முதல் நிலை பேரூராட்சி
திண்டுக்கல் மாவட்டம்.

**இணைப்பு :**

- வரைபடம்.

பெறுநர் :

திருமதி. ஆர். பழனியம்மாள்,
க.எண்.2/12A,
உயர்நிலைப்பள்ளி,
பெரிய தெரு, பட்டிவீரன்பட்டி, திண்டுக்கல் .

நகல் :

- நகர் ஊரமைப்புத்துறை, மதுரை மண்டல துணை இயக்குநருக்கு தகவலுக்காக.
- நகர் ஊரமைப்புத்துறை, திண்டுக்கல் மாவட்ட உதவி இயக்குநருக்கு தகவலுக்காக.
- திண்டுக்கல் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
- உதவி இயக்குநர், நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறை திண்டுக்கல் வட்டம், திண்டுக்கல்.
- சார்பதிவாளர், அய்யம்பாளையம் சார்பதிவகம்.
- இருப்பு கோப்பிற்கு.